**OS. No. 142/2018**

**நாள். 28.10.2025**

**பெயர் : பெருமாள் த/பெ மொட்டையகவுண்டர்**

வாதி தரப்பு 2-ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் நிலத்திற்காக வந்துள்ளேன். வாதி சுசேந்திரனுக்கு நிலம் எப்படி பாத்தியப்பட்டது என்றால் அவருக்கு ஆதி நிலம் ஆகும். தாவா சொத்தின் சர்வே எண் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி சாமிகண்ணு 30 செண்ட் நிலம் ஆக்கிரமித்துள்ளார் என்று நான் கூறியுள்ளேன் அதற்கான செக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி சாமிகண்ணு நிலத்தை விற்றுவிடுமாறு நான் என் முதல் விசாரணை வாக்குமூலதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எப்போது கேட்டார் என்றால் சுமார் 8 - 10 வருடங்களுக்கு முன்பாக கேட்டார். என் முன்பாக பிரதிவாதி சாமிகண்ணு கேட்டாரா என்றால் இல்லை. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஒரு வருடத்திற்கு முன்பு முட்டுக்கல்லை பிடுங்கி வரப்புகளை வெட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன், அவருக்கு தாவா 2018 ல் தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதிகள் இடையூறு செய்து வருவதாக நான் சொல்வது சரியல்ல நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

2) 14.10.2018 ல் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பைசல் பேசிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நானும், பைசலுக்கு சென்றேனா என்றால் இல்லை. பைசல் பேசியபோது ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பிரதிவாதி சாமிகண்ணு நிலத்தை அளந்து விட்டுவிடுவதாக ஒப்புக்கொண்டார் என்றால் சரிதான். மேற்படி விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் அங்கு தான் இருந்தேன். எத்தனை வருடமாக பிரதிவாதி சாமிகண்ணு 30 செண்ட் நிலத்தை ஆக்கிரமித்துள்ளார் என்றால் 10 வருடங்களாக. 10 வருடம் என்று இப்போது சொல்கிறேன் ஆனால் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1 வருடம் என்று சொல்லியுள்ளேன் என்றால் கல் போட்டு ஒரு வருடத்திற்கு முன்னாடி பிரதிவாதி பிடுங்கிவிட்டார்கள். வாதி சுசேந்திரன் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பைசல் பேசும்போது பிரதிவாதி சாமிகண்ணு அளக்கவிடவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி சாமிகண்ணு நிலத்தை ஆக்கிரமிக்கவில்லை என்றும், அவர் நிலத்தை ஓட்டவில்லை என்றும், நான் வாதி சுசேந்திரனுக்காக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/- Tmt.Sri Mathura.S, LL.M.,
District Munsif,
Harur.